# பத்திரிக்கை செய்தி

## புதுக்கோட்டை மாவட்ட நலவாழ்வுச் சங்கம்

புதுக்கோட்டை மாவட்ட நலவாழ்வுச் சங்கத்தில் குளிர்பதன கம்மியர் மற்றும் ஆய்வக நுட்புநர் காலிப் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பிக்க கடைசி நாள் - ஏப்ரல் - 15.04.2023.**

புதுக்கோட்டை மாவட்ட நலவாழ்வு சங்கத்தில் காலியாக உள்ள குளிர்பதன கம்மியர் (Refrigeration Mechanic) மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை அவர்களின் கட்டப்பாட்டில் இயங்கும் மாவட்ட பொது சுகாதார ஆய்வகத்தில் காலியாக உள்ள ஆய்வக நுட்புநர் (Lab Technician) பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. காலிப்பணியிடத்திற்கான விபரங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

குளிர்பதன கம்மியர் (Refrigeration Mechanic) : இப்பணியிடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை பயிற்சி நிறுவனத்தில் (ITI) Refrigeration Mechanic & Air Conditioning பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தது ஓராண்டு முன்அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அதற்குரிய சான்று விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணபதாரருக்கு வேலை வாய்ப்பு துறையால் நியமிக்கப்பட்ட வயது பெற்றிருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கு ஒப்பந்த மாத ஊதியமாக ரூ.20,000/- வழங்கப்படும்.

ஆய்வக நுட்புநர் (Lab Technician) : இப்பணியிடதிற்கு பண்ணிரெண்டாம் வகுப்பில் உயிரியல் பாடப் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், மருத்துவக் கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் DMLT பாடப் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தது ஓராண்டு முன்அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு வயது 30 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு ஒப்பந்த மாத ஊதியமாக ரூ.13,000/- வழங்கப்படும்.

இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானது எனவும், வரும் காலங்களில் பணிவரன்முறை செய்யப்படவோ அல்லது நிரந்தரம் செய்யப்படவோ மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பிக்க விருப்பம் உள்ளவர்கள் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம், பழைய பேருந்து நிலையம் அருகில், நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில், மதுரை ரோடு, புதுக்கோட்டை - 622 001 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் **15.04.2023** அன்று மாலை **5.00** மணி வரை சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்கண்ட பணிகளுக்கான விண்ணப்பத்தினை https://pudukkottai.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்யலாம். மேற்குறிப்பிட்ட காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

**செயற்செயலர்,**
**மாவட்ட நலவாழ்வுச் சங்கம் மற்றும்**
**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்,**
**புதுக்கோட்டை.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**தலைவர் மாவட்ட நலவாழ்வுச் சங்கம்,**
**புதுக்கோட்டை.**